(2) THE MADRAS PLANTATIONS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL NO. 16 OF 1958).

THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, Sir, I move :

'That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 16 of 1958), as amended by the Select Committee, be taken into consideration '.

Sir, the Bill is intended not only to bring in additional revenue to Government to balance the Revenue Budget, but to see that there is progression and equity in the method of taxation of all sectors of agriculture. Some of the Members of the Committee opposed the measure on the grounds that it would lead to complications and harassment of the small holders of land and that there is no need to give priority to this tax over the question of fixation of ceilings on landholdings. But the majority of the Committee did not share the above view and were of the opinion that the provisions of the Bill, as amended by the Select Committee, fully achieved the objects in view. The Committee subjected the provisions of the Bill to a very careful scrutiny and made several changes therein.

I would like to mention a few of the more important changes. The Committee decided that the non-agricultural income of the agricultural income-tax assessee should not be taken into account in reckoning his total income for the purpose of assessing the agricultural income at the higher rates.

The Committee also decided to give greater relief in the matter of exemption and composition. The exemption limit has been raised from 10 standard acres to 12½ standard acres and the composition limit has been fixed at four times the exempted extent, namely, at 50 standard acres. A person receiving an agricultural income of less than Rs. 3,600 will be exempt from the tax and there will be no tax on the first Rs. 3,600 of the agricultural income of a person liable to tax. In view of these liberal provisions, the Committee also decided that no enhanced exemption limit be set in the case of Hindu joint families.

Pasture lands and lands held by co-operative societies will be exempt from tax.

Provision has been made for the registration of crops in the cultivation year, at the option of the assessee, so that at the time of actual assessment, there will be no difficulty both for the assessee and the assessing authority.

Rebate will be allowed for premium paid to effect an insurance on the life of the assessee or his wife or husband or dependant son.

Land revenue surcharge collected from an assessee in 1957–58 will be adjusted towards the agricultural income-tax due from him.

17th September 1958] [Sri M. A. Manickavelu]

For the assessment year 1958–59 as the assessees may not have accounts showing their income in 1957–58, assessment will be made by applying an amplified composition formula.

The rate of interest allowed under section 5 (*k*) of the principal Act on the amount borrowed and spent on the land will be raised from 6 per cent to 9 per cent.

Provision has been made to the effect that once an order permitting composition of tax is passed, it should be in force for three years. Power has also been taken to prescribe, by rules, the circumstances under which and the manner in which, remission may be granted to persons permitted to compound tax.

The provision extending the principal Act, as amended, to the transferred territories has been omitted, due to certain administrative difficulties in enforcing it in those areas.

The other changes have all been set out in the report of the Select Committee and I need not enumerate them.

Sir, I commend this Bill for consideration.

MR. SPEAKER : Motion moved :

'That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 16 of 1958), as amended by the Select Committee, be taken into consideration '.

We have got 45 minutes today, 3¼ hours tomorrow and very nearly 2¼ hours on Friday and Saturday. I am saying 2¼ hours because there are adjournment motions, Rule 40 statements and extension of question hour. I propose therefore with the approval of the House to keep the whole of to-day and to-morrow for the general discusson of the Bill and take up clause by clause consideration on Friday and Saturday. If necessary, the Hon. Minister may reply to the general discussion on Friday morning and then we shall proceed with the clause by clause consideration of the Bill. (Hon. Members : Yes). I have already got a number of names on the list. Therefore I shall fix a time-limit of ten minutes for each hon. Member.

* SRI T. SAMPATH : Mr. Speaker, Sir, while supporting the Bill I desire to express some of my views on the Bill. The Hon Minister referred to the notable changes made in the Bill by the Select Committee. I find that two significant changes have been made in the Bill. They relate to fixation of exemption limit at 12½ standard acres and the exemption limit of Rs. 3,600 in the schedule.

(Deputy Speaker in the Chair.)

Secondly, the provision for clubbing of non-agricultural income with the agricultural income for the purpose of determining the exemption limit and also for arriving at the slab rate has been removed.

[Sri T. Sampath] [17th September 1958

We are really thankful that these changes have been made. At the same time I would very much like to point out to the hon. Members that one more aspect has to be very carefully considered. Agriculture is no doubt the main occupation of the people of our country and in principle agricultural income-tax is a welcome measure if it can replace the land revenue system, otherwise, as I stated at the time of the introduction of the Bill, it may result in double taxation. Under the present Bill if it becomes an Act, the agriculturists will have to pay not only agricultural income-tax but also land revenue. It is a well-known fact that agricultural income is very low compared to other incomes.

4-20 p.m. Sir, if we take the agriculturists as well as the non-agriculturists who get the same quantum of income into consideration, it can easily be found that the agriculturist will have to pay heavy taxes under the present provisions of the Bill as compared to the non-agriculturist. That is because, as I have already stated, the agriculturist has to pay now land revenue, surcharge, water tax, betterment levy and so many other taxes. So, in the absence of any relief in respect of land revenue, I am afraid that this tax would be considered neither progressive nor equitable. In the circumstances, may I venture to suggest that a basic readjustment of the land revenue system is at least necessary to justify the present imposition of this tax. It may be stated that now the landlords as well as small agriculturists are getting good prices for their foodgrains. This may not be fully correct. There is, no doubt, an increase in their income but that increase in income is more than offset by the high cost of cultivation, high cost of agricultural wages, labour charges and also high cost of living conditions.

Then I pass on to the 12½ standard acres fixed by the Select Committee, for which exemption is given from payment of tax. What a 'standard acre' means, is also defined. One acre of wet land assessed to land revenue at the rate of Rs. 8 and above per acre, has been defined as the 'standard acre'. In my district, (Tanjore District), there are lands which are assessed at the rate of more than Rs. 22 or Rs. 24 per acre. To apply the same rate of tax to these lands which are heavily assessed, I think, will not be sound or logical. Further, according to me, the procedure specified for arriving at the standard acre is a little bit complicated. I am of the view that a much simpler system can be adopted. In this connection, I suggest that the kist or land revenue payable by a particular person can be taken into account and it can be divided by 8 and the figure thus arrived at, can be adopted as the standard acre. In the case of wet lands which are assessed to more than Rs. 8 per acre the excess over Rs. 8 can be deducted in the total land revenue or kist and once again it can be divided by 8 and the figure thus arrived at can be adopted as the standard acre.

Now, coming to the Schedule, I find that for the first Rs. 3,600 there is no tax and then the tax is levied on a graded scale. As I said before, the commitments of the agriculturists are heavier

17th September 1958] [Sri T. Sampath]

than the non-agriculturists and, therefore, it stands to reason that the exemption limit should at least be raised to Rs. 5,000. With regard to the rate of tax, I feel that the rates are a little bit high. The rates applicable to plantation income *mutatis mutandis* have been applied to the agricultural income also. There must be some difference between the plantation income and the agricultural income. Apart from that, if we compare it to the tax levied in other States like Mysore, Kerala and West Bengal,—I am speaking subject to correction—we will find that the highest tax is only 25 naye Paise in these States. The rates proposed in this Bill are very much higher than that.

Further, there was a provision made for joint family in the schedule in the original Bill. It read like this—

'Provided that no agricultural income-tax shall be payable on a total agricultural income which is less than three thousand rupees.

The limit referred to in the above proviso shall be Rs. 6,000 in the case of every Hindu undivided family. . . .'

This provision has been dropped by the Select Committee, I do not know for what reason it was omitted by the select committee. May I suggest exemption is necessary and should be given to the joint family? The limit can be fixed at Rs. 7,000 or Rs. 7,500. A similar provision has been made in the Mysore Agricultural Income-tax Act.

Then I pass on to the new section 6-A added by the Select Committee. This section enjoins on the landholder alone to submit an application for registering the nature of the crops grown on the land. But I would suggest that the tenant also must be made responsible for getting the crops grown by him on the land registered. As regards the tax to be collected, it should be levied proportionately in respect of each share. I am glad that provision has been made for compounding of taxes to persons holding lands four times the exempted limit, that is, it comes to 50 acres or so. But there again the person applying for composition will have to produce some sort of evidence to show that he comes within the compoundable limit. That is a difficult provision..

The Hon. Minister also referred to another provision, according to which the person who wants to compound the tax cannot change it within three years. This provision, according to me, is a little hard provision.

Sir, with regard to the keeping of accounts, small agriculturists cannot keep proper accounts just like businessmen. So while framing rules, some latitude should be given to them in the matter and mode of keeping accounts. Further, the rules must be framed in such a way as to prevent evasion of tax and at the same time avoid harassment by the administration.

[Sri T. Sampath] [17th September 1958

Lastly, I want to make one more suggestion. As in the Income-tax Act, there must be a provision made for earned income relief. There must be some relief given to the agriculturists who cultivate their lands under the Pannai system or direct cultivation. There is a provision for earned income relief in the Mysore Agricultural Income-tax Act. Up to a limit of Rs. 2,000, provision should be made to enable such an individual agriculturist to deduct that amount as earned income from the total income. Likewise, in the case of joint Hindu families, 4,000 rupees may be allowed to be deducted. I suggest that a provision to this effect be incorporated in the Bill. With these suggestions, I support the Bill.

4-30 p.m. *SRI V. SANKARAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை இவ்வளவு சீர்திருத்தங்களுடனே கொண்டு வந்திருப்பது பற்றி பொறுக்குக் கமிட்டியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில், வெளிவந்த மசோதாவில் இருந்த பல கடுமையான ஷரத்துக்கள் இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கின்றன. அதிலிருந்த கடுமைகள் இப்பொழுது நீக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக சம்பந்தப்பட்ட மந்திரியையும், பொறுக்குக் கமிட்டியையும் நாம் மிகவும் பாராட்ட வேண்டும்.

உதாரணமாகக் குறிப்பிடவேண்டுமென்றால், ரூ. 1,500-ல் இருந்த எக்செம்ஷன் லிமிட் ரூ. 3,600-க்கு உயர்த்தப்பட்டிருப்பது பெரிய சீர்திருத்தம். 12½ ஏக்கரா வரைக்கும் எக்செம்ஷன் லிமிட் கொடுத்திருப்பதும் நல்லது. 50 ஏக்கரா வரைக்கும் அவர்கள் கம்பவுண்ட் பண்ணிக் கொள்ளலாம் என்பதும் நல்ல சீர்திருத்தம். முதலில் விவசாய வருமானம் அல்லாத வருவாயையும் சேர்த்துக்கொண்டு, அதைக் கணக்கெடுத்துப் பார்ப்பது என்று இருந்தது. விவசாய வருமானம் அல்லாத வருவாய் இந்தப் ப்ரொவிஷனிலிருந்து தற்போது எடுக்கப்பட்டுள்ளது. அது ஒரு நல்ல சீர்திருத்தம். 12½ ஏக்கராவுக்கு மேல் இருந்தால் ரிஜிஸ்தர் செய்துகொண்டு கணக்குக் கொடுக்கலாம் என்பதும் நல்ல சீர்திருத்தம். அந்த முறையில் பூர்ணமாக பல நல்ல சீர்திருத்தங்களுடன் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இருந்தாலும், இன்னும் ஒன்றிரண்டு திருத்தங்களுடன் மேலும் சீர்திருத்திவிட்டால் நன்றாக அமையும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ சம்பத் அவர்கள் சொன்னதுபோல், ஜாயிண்ட் ஹிந்து குடும்பங்களுக்கு ஒரு சலுகை அளிக்க வேண்டும். மசோதாவில் முதலில் கொண்டுவந்தபோது இது இருந்தது. அப்பொழுது இருந்த சலுகைகூட இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ப்ரொவைசோ எடுக்கப்பட்டிருப்பதன் காரணம் என்ன என்று தெரியவில்லை. 'ப்ராக்மெண்ட்டேஷன் ஆப் ஹோல்டிங்ஸ்' கூடாதென்ற தத்துவத்தை நாம் ஏற்கெனவே ஒத்துக்கொண்டிருக்கிறோம். ஜாயிண்ட் ஹிந்து குடும்பங்கள் துண்டு துண்டாகப் போகக்கூடிய முறையில் நாம் செய்யக்கூடாது. ரூ. 3,600 என்றும், 12½ ஏக்கர் என்றும் எக்ஸெம்ஷன் லிமிட் இருந்தால் கூட்டு ஹிந்து குடும்பங்கள் தனித்தனியே பிரிந்தால்தான் அனுகூலம் கிடைக்கும் என்ற காரணத்திற்காக துண்டு துண்டாகப் பிரித்துக்கொண்டு விடுவார்கள். அப்படிப்பிரித்துக்கொள்வது உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவியாக இருக்காது, இதை நாம் கவனிக்க வேண்டும்.

உதாரணமாக, மைசூர் சட்டத்திலே 7 ஆயிரம் ரூபாய் வரைக்கும் ஹிந்து கூட்டுக் குடும்பங்களுக்கு விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பெங்கால் ராஜ்ய விவசாய வருமான வரிச் சட்டத்திலும், ஹைதராபாத் சட்டத்திலும் கூடிய சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. திருவாங்கூர்-கொச்சி விவசாய வருமான வரிச் சட்டத்திலே ஹிந்து கூட்டுக் குடும்பங்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் வரைக்கும் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே நாமும் ஹிந்து கூட்டுக் குடும்பங்களுக்கு அதிக சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

17th September 1958] [Sri V. Sankaran]

மாக்ஸிமம் **Tax** லிமிட் 45 நயே பைசே என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால், இதர மாகாணங்களை எடுத்துக்கொண்டால், 25 நயே பைசே தான் அதிக பட்ச அளவாக இருக்கிறது. வருமானத்திற்கு அதிகப்படி யான வரி 25 நயே பைசேவுக்கு மேல் இல்லை. மைசூர் வருமான வரிச் சட்டத்தில் ரூ. 50,000 வரைக்கும் 25 நயே பைசே என்றும், அதற்கு மேற்பட்டு வருமானம் இருந்தால், 40 நயே பைசே என்றும் இருக்கிறது. திருவாங்கூர் சட்டத்திலும் 25,000 ரூபாய் வருமானம் வரைக்கும் 25 நயே பைசே தான், அதற்குமேல் சூபர் டாக்ஸ் என்றும் இருக்கிறது. எந்த ராஜ்யத்தை எடுத்துக்கொண்டாலும், ரூபாய்க்கு 25 நயே பைசே வுக்கு மேல் போகவில்லை. 25 நயே பைசே தான் அதிகப்பட்சமாக போடப்பட்டிருக்கிறது. நில வரி போடப்பட்டிருப்பதையும் மனதில் கொண்டு, ரூபாய்க்கு 25 நயே பைசேவுக்கு மேல் விவசாய வருமான வரி வைத்தி ருப்பது நியாயமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சொந்த முறையில் ஒரு தனி நபர் விவசாயம் செய்தால், அதற்குத் தனியான Earned income என்று 2,000 வரை Exemption சலுகை மைசூர் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல், ரூ. 4,000 வரைக்கும் விவசாய வருமானமுள்ள ஹிந்து கூட்டுக் குடும்பங்களுக்கு விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய வருமான வரிச் சட்டத் திலும் இம்மாதிரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் நாமும் இந்தச் சட்டத்திலே ஹிந்து கூட்டுக் குடும்பங்களுக்கு ஓரளவு சலுகை அளிப்பதினால் பாதகம் ஏற்பட்டு விடாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரூ. 3,600 வரைக்கும் விதி விலக்கு போட்டிருப்பதற்குப் பதிலாக ரூ. 5,000 வரைக்கும் என்று போட்டால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஹைதராபாத்தில் விவசாய வருமான வரி சட்டத்தில் பத்தாயிரம் ரூபாய்க்குக் கீழ் வருமானம் இருந்தால் வரி கிடையாது என்று இருக்கிறது. அந்த முறையிலே இல்லாவிட்டாலும் நாம் 5,000 ரூபாய் வரையிலுமாவது விலக்கு கொண்டுவரலாமென்று நினைக்கிறேன்.

செக்ஷன் 5-லே மூன்று ஷரத்துக்கள் சேர்க்கலாம் என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். நிலத்தை அடமானம் வைத்திருந் தால், அதற்குக் கொடுக்கக்கூடிய வட்டியையும், முதலீட்டுச் செலவு செய்திருந்தால், அதற்குள்ள வட்டியையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். மார்ட்கேஜ் அடமானம், ஒத்தி போன்றவைகள் விஷயத்திலே வட்டி செலுத்தினால், அதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளலாம். வேறு காரணத்திற்காக கடன் வாங்கினாலும் நிலத்தை விருத்தி செய்வதற்குக் கடன் வாங்கினாலும் அந்த வட்டிக்கும் சலுகை கொடுக்க வேண்டும். அதையும் கழித்துக்கொண்டுதான் விவசாய வருமானத்தைக் கணக்கிட வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதுவும் **Mysore** சட்டத்தில் இருக்கிறது.

வட்டி விகிதத்தைப் பற்றியும் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு, அதிக பட்ச வரம்பை ரூ. 3,600 என்று வைத்திருப்பதை ரூ. 5,000 ஆக ஆக்க வேண்டுமென்பது பற்றியும் ஒரு திருத்தம் கொடுத் திருக்கிறேன். அதையும் அனேகமாக ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

Schedule I, part I-ல் ப்ரொவைஸோ ஒன்று இருக்கிறது. என்ன காரணத்திற்கு அந்த ப்ரொவைசோ இருக்கிறது, அதனால் என்ன அனுகூலம் என்று தெரியவில்லை. அதையும் மந்திரி அவர்கள் விளக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஷெட்யூலில் முதல் பாகத்திலே கீழ்க்கண்ட ப்ரொவைஸோ இருக்கிறது :

"Provided that—

(i) the agricultural income-tax payable shall in no case exceed one-half of the amount by which the total agricultural income exceeds three thousand and six hundred rupees ;"

இது அனேகமாக மத்திய வருமான வரிச் சட்டத்திலும், மற்ற மாகாண சட்டங்களிலும் சேர்த்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய மசோதாவிலே இதனுடைய உபயோகம் இருக்கிறதா என்று தெரிவித்தால் அனுகூலமாக இருக்கும். ஏனென்றால், இதனுடைய பிரயோஜனம் என்ன என்பதை விளக்கவில்லை. விவசாய வருமானம் என்னவாக வைத்துக் கணக்குப் போட்டுப் பார்த்தாலும், இதனுடைய உபயோகம் என்ன என்பது தெரியவில்லை. அதையும் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

" ப்ரின்சிபல் ஆபீசர் " என்பதற்கு மெயின் ஆக்டிலே கொடுத்திருக்கும் டெபனிஷனை வைத்துக்கொண்டு இதிலும் ஒரு திருத்தம் செய்திருக்கலாம். வருமான வரி அதிகாரி எந்த ஒரு ஆளையும் ப்ரின்சிபல் ஆபீசர்—அசோசியேஷன் ஆப் கம்பெனியைப் பொறுத்தவரையில்—என்று கருதி அவருக்கு நோட்டீஸ் கொடுக்கலாம். அவரே Indent பண்ணினால் போதும் என்று இருக்கிறது. ஆர்ட்டிக்கில்ஸ் ஆப் அசோசியேஷன் இலே, கான்ஸ்டிட்யூஷன் ஆப் தி கம்பெனியிலே யார் ப்ரின்சிபல் ஆபீசர் என்று தீர்மானம் பண்ணப்பட்டிருக்கிறதோ அல்லது யார் அவ்வாறு ஆக்ட் செய்கின்றார்களோ அவர்தான் ப்ரின்சிபல் ஆபீசர் என்று கருதப்படவேண்டுமென்று திருத்தம் செய்தால் நன்றாக இருக்கும். ப்ரின்சிபல் ஆபீசர் என்பதற்கு தகுந்த விளக்கம் கொடுக்க வேண்டும். அதற்கு ஒரு திருத்தம் இருந்தால் நன்றாக இருக்கும். ஆகவே நான் கொடுத்திருக்கும் இந்த அமெண்ட்மெண்ட்களையும் சேர்த்தால் நன்றாக இருக்கும். " ஸ்டாண்டேர்ட் ஏக்கர் " ஐப் பற்றி கனம் சம்பத்
4-40 p.m. அவர்கள் சொன்னார்கள். அதை எடுத்துக்கொண்டாலும் ஒரு சில வித்தியாசங்கள் ஏற்படலாம். கூடுமான வரையில், நல்ல முறையில் "ஸ்டான்டேர்ட் ஏக்கர் " என்ன என்பதைப் பற்றி நன்கு விளக்க வேண்டும். இந்த மசோதா எல்லோராலும் வரவேற்கத்தக்க மசோதா என்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI A. GOVINDASAMY : சட்டமன்ற துணைத்தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் வரவேற்று பேசுகிற போது ஒரு சில விஷயங்களை இச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். வருமான வரி விவசாயிகளுக்குப் போடுவதைப் பெரிய நிலச்சுவான்தார்கள் நிச்சயமாக எதிர்க்கத்தான் செய்வார்கள். அதை புறக்கணித்து விட்டு, பொதுவாக இது ஏழைகளுக்கு பாதுகாப்பு அளித்து, ஒரு சிலரை பாதிக்கிற காரணத்தினால் அவர்கள் எதிர்ப்பை பொருட்படுத்தாது தீவிரமாக இந்த மசோதாவைக் கொண்டு வருவதைப் பற்றி உண்மையில் பாராட்டத்தான் வேண்டும். அப்படிச் செய்யும்போது ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுகிற சட்டத்தை உடனடியாக கொண்டு வராமல் தடுப்பதற்கு இது ஒரு துணையாக அமையுமோ என்ற நிலையைப் பார்க்கிறபோது இந்த மசோதாவை எதற்காக கொண்டு வருகிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அதிலும் இந்த 12½ ஏக்கர், ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறிப்பிட்டிருப்பது நிலச் சீர்த்திருத்தத்திற்கு அடிப்படையாக அமையும் என்று நிதி அமைச்சர் அவர்கள் செலக்ட் கமிட்டியில் சொல்லியதாக கேள்விப்படுகிறேன். அப்படி பார்க்கும்போது இந்த மாதிரி சட்டங்கள் வருகிறபோது பொதுவாக இதை விட அதிக நன்மை தரும் சட்டங்களை கொண்டு வர அரசாங்கம் தயங்கக் கூடாது என்பது எனது வேண்டுகோள். நிலத்திற்கு இரண்டு அணா சர்சார்ஜ் போடுகிற நிலைமையில் இதற்கு விதிவிலக்கு அளித்திருக்க வேண்டும். அப்படிக் கொடுத்திருந்தால் ஏழைகள் இதை வரவேற்பதற்கும், சர்க்காரைப் பாராட்டுவதற்கும் வசதியாக இருக்கும். விவசாய வருமான வரி போடுகிறபோது, மடங்களுக்கும், கோவில்களுக்கும் இருக்கிற நிலங்களுக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். அதற்குக் காரணம்

17th September 1958] [Sri A. Govindasamy]

புரியவில்லை. இன்று மடங்களின் பெயரால் தஞ்சையில் மட்டும் இருக்கிற தர்மபுரம், திருவாடுதுரை, திருபனந்தாள் போன்ற மூன்று மடங்களுக்கு மட்டும் பல்லாயிரக்கணக்கான வேலி நிலங்கள் இருக்கின்றன. கோவில்களை எடுத்துக்கொண்டால் திருவாரூர் ஆலயத்திற்கு ஆயிரம் வேலிக்கு மேல் இருக்கிறது. மடங்களுக்கும், ஆலயங்களுக்கும் உள்ள நிலங்களை ஆண்டவன் அனுபவிப்பது கிடையாது. இந்த வரியைப் போட்டால் ஆண்டவன் கோபித்துக்கொள்வார் என்று அமைச்சர் அவர்கள் பயப்பட வேண்டாம். மடங்களுக்கு உள்ள நிலங்களை மடாதிபதிகள் தான் அனுபவிக்கிறார்கள். அதை நல்ல காரியங்களுக்காக அவர்கள் உபயோகிக்கிறார்களா என்று பார்த்தால் அதுவும் இல்லை. "எக்ஸ்ஸெம்ஷன்" விதிவிலக்கு இல்லாதபடி செய்தால் அவர்களை நான் பாராட்டுவேன். கிருஸ்துவர்களின் கோவில்களின் பேரில்உள்ள நிலங்களின் வருமானத்தை வைத்துக்கொண்டு அவர்கள் கல்லூரிகள்போன்ற வைகள் கட்டி, படிப்பு விஷயத்தில் அக்கறை காட்டுகிறார்கள். அதேபோல், மடங்களும், கோவில்களும் தங்கள் வருமானத்தை கல்வி விஷயத்திற் காகவோ அல்லது தொழிற் நிலையங்கள் அமைக்கவோ உபயோகித்தால் அந்நிலங்களுக்கு வேண்டுமானாலும் விதிவிலக்கு அளிக்கலாம். அப்படி யில்லாமல் மடங்களின் நிலங்களையும், கோவில்களின் நிலங்களையும், மடாதி பதிகளும், தர்மகர்த்தாக்களும் அனுபவிக்கும் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிப்பது என்பது கூடாது. அந்நிலங்களின் மீதும் வரி போட அரசாங்கம் பயப்படக்கூடாது. அந்நிலங்களுக்கு இன்னும் அதிகப்படியான வரி போட வேண்டும். அவைகள், தர்மத்திற்காக எழுதி வைத்தது. அவைகளுக்கு அவசியம் வரி போடத்தான் வேண்டும். அதற்கு விதிவிலக்கு அளிக்காத நிலையை உண்டாக்க வேண்டுமென்று எனது திருத்தத்தை வலியுறுத்தி கிறேன். எங்கள் கட்சி சார்பில் அண்ணாமலை அவர்கள் கூட இது சம்பந்தமாக ஒரு "டிஸெண்ட் நோட்" எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள் கிறேன்.

* SRI M. R. KANDASWAMI MUDALIYAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இங்கு கொண்டு வந்திருக்கக் கூடிய மசோதாவை ஆதரித்து நான் ஒரு சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது கொண்டு வந்திருக்கக் கூடிய எக்கர் முறைப்படி, அதில் பற்பல சிக்கல்கள் ஏற்படாத வண்ணம் அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது இதில், ஸ்டான்டர்ட் எக்கர் என்பது $12\frac{1}{2}$ என்று போட்டிருக்கிறார்கள். அந்த $12\frac{1}{2}$ எக்கரில் வரும் வருமானம், விவசாயி தான் செய்யக் கூடிய செலவையும் உட்படுத்தித்தானா என்று பார்க்க வேண்டும். அதாவது, இப்பொழுது பெரும்பாலான விவசாயிகள் கடன் வாங்கித்தான் தங்கள் நிலங்களை சீர்ப்படுத்துகிறார்கள். கடன் வாங்கித்தான் கிணறுகள் வெட்டுகிறார்கள், மோட்டார் வாங்குகிறார்கள். நிலத்தைச் சீர்திருத்த அவர்கள் வாங்கும் கடனுக்கு வட்டி $6\frac{1}{4}$% என்று அரசாங்கம் வைத்துக்கொண்டாலும் அவர்கள் வெளியே வாங்கும் போது 12%, 15% வட்டி கொடுத்துத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. இந்த விவசாய செலவினங்களோடு அந்த வட்டியையும் சேர்த்தால்தான் அதையும் சேர்த்து மீதியுள்ள வருமானத்தைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதோடு, இந்த $12\frac{1}{2}$ எக்கர் நிலத்தில் இருந்து வரக் கூடிய வருமானம் இருக்கிறதே, அதைக் கணக்கு எடுக்கப் போட்டிருக்கும் அதிகாரிகள் எப்படி கணக்கு எடுப்பார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். நல்ல பருவ மழை பெய்யும் வருடத்தில் கிடைக்கும் வருமானம் ஒரு மாதிரியாக இருக்கும். அதையனுசரித்து அதிகாரிகள் வருமானத்தை நிர்ணயிப்பார்கள். ஆனால் அடுத்த வருடம் பருவ மழை பெய்யத் தவறி நஷ்டம் ஏற்படும் நேரத்தில் விவசாயிகள் அனுபவிக்கும் கஷ்டங்கள் சொல்லிமுடியாது. எத்தனையோ ஜில்லாக்களில் அப்படியிருக்கிறது. வானம் பார்த்த பூமி, சேலம் ஜில்லாவில் நிறைய இருக்கிறது. இந்த வருட வருமானத்தை வைத்துக்கொண்டு வரி விதிக்கும் அதிகாரி, அந்தக் கணக்கையே அடுத்த வருடமும் போட்டால், அதாவது பருவ மழை தவறி நஷ்டம் ஏற்படும்போதும் போட்டால், அவன் வருமான வரி கொடுப்பதற் காகத் தான் ஏற்கனவே வாங்கியிருக்கும் கடனோடு மேலும் கடன் வாங்கித்

[Sri M. R. Kandaswami Mudaliar] [17th September 1958

தான் வரி கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே, அதிகாரிகளிடம் இவர்களின் நிலையை ஒப்படைக்கும்போது கஷ்டங்கள் பல நேரிடும். ஸ்டான்டேர்ட் ஏக்கர் 12½ என்பதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தினுல் கூட நல்லது. செலக்ட் கமிட்டியில் " 18 " என்றுபோட்டிருக்கிறார்கள். அப்படி 18 என்று போட்டிருந்தாலும்கூட, வரி வசூலிக்கும்போது என்ன விளைச்சல் வந்தது என்பதையும் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். அப்படிக் கணக்கு எடுக்கும்போது, கிராமாதிகாரி சொல்வது சரியா அல்லது " செக்" செய்யும் அதிகாரி சொல்வது சரியா என்பதைப் பற்றியும் யோசிக்க வேண்டும். " சேல்ஸ் டாக்ஸ் " ஞல், வியாபாரிகள் படும் தொல்லைகள் அதிகம். விவசாயி, தனக்கு கிடைக்கும் சொல்ப வருமானத்தைக் கொண்டுதான், தன் குழந்தைகளை படிக்க வைப்பது, கல்யாணம் காட்சி நடத்துவது, பின் மீதியுள்ள பணத்தை வைத்துத்தான் தன் நிலத்தை பண்படுத்த வேண்டியிருக்கிறது. அதோடு தான் ஏற்கனவே வாங்கியிருக்கும் கடனையும் இதில் இருந்துதான் திருப்பிக் கொடுக்கவேண்டும். ஆகவே, இந்த 12½ ஏக்கர் என்று வைத்தால் விவசாயி நல்ல முறையில் தன் வாழ்க்கையை நடத்த முடியாது. ஆகவே, ஸ்டான்டேர்ட் ஏக்கர் 12½ என்பதை 20 என்றுவது வைக்க வேண்டும். அதோடு அதிகாரிகளிடத்தில் கணக்கையே காட்டக் கூடாது என்ற நிலையும் இருந்தால்தான் ஓரளவு சிறிய நிலச்சுவாந்தார்கள் பயன் அடைய முடியும். வானம் பார்த்த பூமிகளில் விவசாயம் செய்யும் விவசாயிகள் படும் கஷ்டங்களை சொல்லி முடியாது. அவனுக்கு நல்ல உடை உடுக்க முடிவதில்லை. அவன் குழந்தைகள் நல்ல நகைகள் அணிய முடிவதில்லை. தன் பிள்ளைகளை உயர்ந்த படிப்பு படிக்க அனுப்பமுடியாத நிலையில்தான் அவன் இருக்கிறுன்.

4-50 p.m. இந்த நிலைமையில் இருக்கக்கூடியவர்களுக்கு, மேலும் எழுத்து வாசனை இல்லாதவர்கள் கணக்கு எழுதி அதிகாரிகளிடத்தில் கணக்கு ஒப்படைக்க வேண்டும் என்று சொல்லியிருப்பது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கும். ஆகையினுல் ஓரளவுக்கு 20 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று நிர்ணயித்தால் அவர்களுக்கு அதன் மூலமாக வருமானம் வந்தால் குமஸ்தாக்களை வைத்துக் கணக்கெழுதுவதற்கு வசதி ஏற்படும். ஆகவே இவ்விதம் வைத்துக்கொண்டால் அவர்களுக்கும் சௌகரியமாக இருக்கும். ஆகவே முதலில் அடிப்படையாக இப்போது இருக்கும் ஏக்கர்களை அதிகப்படுத்துவது அவசியம் என்பதை சொல்லிக்கொள்கிறேன். இதை அமைச்சர் அவர்கள் நன்கு பரிசீலித்துப் பார்த்து இதற்குத் தகுந்த முடிவை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அதோடு இதில் சீர்திருத்தம் செய்து அரசாங்கத்திற்கு அதிகப்படியான வருமானத்தைக் கொண்டு வருவதற்கு வழி செய்திருக்கிறேம். ஏற்கெனவே இதைப்பற்றி விவாதித்து இருக்கிறேம். லட்சக் கணக்கில் மில்களில் வரக்கூடிய வருமானங்களை எல்லாம், மில் முதலாளிகள் விவசாயத்தின் மூலமாக கிடைத்தது என்று சொல்லி அரசாங்கத்தை ஏமாற்றி வந்தார்கள். இப்போது அவ்விதம் செய்யமுடியாத ஒரு முறையை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே இதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆகவே சிறிய அளவில் வருமானம் வரக்கூடிய இந்த இன்கம்டாக்ஸ் சட்டத்தில் சிறிய நிலச்சுவான்தார்கள் பாதிக்காத முறையில், அவர்களுக்கு இதனுல் இருக்கின்ற கஷ்டங்களை எந்த அளவுக்கு நீக்க முடியுமோ அந்த அளவுக்கு நீக்கி விவசாயிகளைப் பாதுகாக்கக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டம் இருக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை. மற்றப்படி இதில் கொண்டு வந்திருக்கின்ற கோரிக்கைகளை எல்லாம் நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். அதோடு செலவு இனங்களில் பின்னுல் அவர்கள் முன்னேறுவதற்கு செய்யும் செலவுகளையும் செலவுக் குறிப்பில் சேர்த்துக் கணக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு இதில் சொல்லப்பட்டிருக்கும் திருத்தங்களையும் பரிசீலித்து இந்த சட்டத்தை நல்ல முறையில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

17th September 1958]

* SRI A. VEDARATHNAM : கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த விவசாய வருமான வரி மசோதாவை நான் முழு மனதோடு ஆதரிப்பதுடன் அதில் சில யோசனைகளையும் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று அவர்களை கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன் பேசிய பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டது மாதிரி முன்னமேயே நிலங்களுக்கு வரிவிதிக்கப்பட்டு வந்திருக்கிறது. அது முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை நிலத்தினுடைய சராசரி வருமானத்தை கணக்கெடுத்து அதில் சரிபாதி அதாவது ஐம்பது சதவிகிதம் நில வரியாக வசூலிக்கப்பட்டு வந்தது. இப்போது தானிய விலைகளும் இதர பொருள்களின் விலைகளும் எல்லாம் இதுவரை என்றும் காணாத அளவுக்கு விலை உயர்ந்து இருக்கின்ற காரணத்தால் இந்த நில வரியை நிர்தாரணம் செய்ய முடியாதிருப்பதின் காரணமாக இந்த விவசாய வருமான வரியை கொண்டு வந்திருக்கிறார்கள். அதே சமயத்தில் கவர்னர் பெருமான் அவர்கள் பேருரையில் குறிப்பிட்டிருந்தபடி நிலங்களுக்கு உச்ச வரம்பு கட்டுவதற்கும் முடியாத ஒரு நிலை இருக்கின்றது, அதில் பல சிக்கல்களும் இருக்கின்றது. ஆகவே அதை ஒரு முடிவுக்கு கொண்டு வருகிற வரையிலும் நிலத்திலிருந்து அதிகமாகக் கிடைக்கின்ற வருமானத்திலிருந்து ஒரு பகுதியை அரசாங்கத்தினுடைய வருமானத்திற்காகக் கொடுக்க வேண்டுமென்ற காரணத்திற்காக இந்த விவசாய வருமான வரி மசோதா இந்த அவையில் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. நான் முன்னால் குறிப்பிட்டது மாதிரி நிலத்திற்கு என்று முன்னால் ஒரு வரி இருக்கின்றது. அதாவது முப்பது வருடமாக கிடைக்கின்ற வருமானத்தின் சராசரி கணக்கெடுத்து அதில் சரிபாதி வரியாகக் கொடுக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஏற்பட்டிருக்கும் விலையேற்றத்தின் காரணமாக வேறு வரிகள் எல்லாம் கட்டிய பிறகு மிச்சத்திலிருந்து குடும்பச் செலவை சமாளிப்பதற்கு வேண்டிய அளவு விதிவிலக்கு அளித்து உபரியாக இருக்கின்ற வருமானத்திலிருந்து இந்த வரி கொடுக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தில் மற்ற தொழில் துறைகளைப்போல் நிகர நிரந்தரமான வருமானம் வராது என்று பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு ஆண்டு மழையும் மற்ற பருவங்களும் ஒற்றுமையாக இருந்தால் நிரம்ப லாபம் கிடைக்கும். அது ஒன்றும் இல்லையென்றால் அவர்கள் செலவுக்கே கடன் வாங்கக்கூடிய நிலைமை ஏற்படும். மற்ற வருமான வரி செலுத்துபவர்களுக்கு அதாவது நஷ்டம் வந்தால் அந்த நஷ்டம் தீருகின்ற வரையிலும் அதற்கு விதிவிலக்கு வருமான வரியில் அளிக்கப்பட்டிருக்கிறது. அதுமாதிரி விவசாயத்திலும் நஷ்டம் வருமானால் அந்த நஷ்டம் தீருகின்ற வரையிலும் வரி விதிக்கக்கூடாது என்ற முறை இந்த விவசாய வருமான வரி சட்டத்திலும் இருக்க வேண்டும் என்று நான் எதிர்ப்பார்க்கிறேன். அதே சமயத்தில் விவசாயிகள் கணக்கு வைத்து அறியாதவர்கள். கணக்குக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை. இதன்படி சரியான கணக்கு வைத்துக்கொள்ளவில்லையானால் இதர துறைகளில் உள்ளவர்களுக்கு இருப்பது போன்று விவசாயிகளுடைய நிலையும் கஷ்டத்திற்குள்ளாகும் என்பதை கனம் ரெவன்யூ அமைச்சர் அவர்களுக்குச் சொல்லவேண்டிய தேவையில்லை. அதற்கு எல்லாம் போதுமான பாதுகாப்பு அவர்களுக்கு அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன். மேலும் தர்மத்திற்கு என்று செலவு செய்யும் தொகைக்கு நிலவருமானத்திலிருந்து இதில் விதிவிலக்கு அளித்திருப்பதை வரவேற்கிறேன். ஏனெனில் தர்ம ஸ்தாபனங்கள் எல்லாம் அரசாங்கத்தின் கண்காணிப்பிலும் மேற்பார்வையிலும் இருந்து வருகின்றது. பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல் பல மடங்கள், பல தர்ம ஸ்தாபனங்கள் இவைகள் எல்லாம் ஓரியண்டல் காலேஜ் என்றும், ஹைஸ்கூல் என்றும் பல கல்வி ஸ்தாபனங்களை நடத்தி வருகின்றார்கள். அதோடு சில அநாதை யாலயங்களை ஏற்படுத்தி அதன் மூலம் அநாதைக் குழந்தைகளைக்கு கல்வி போதித்தும் வருகின்றார்கள். இவைகளில் ஏதேனும் தவறிழைக்குமானால் இவைகள் எல்லாம் அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருந்து வருவதால் அதை கவனித்துக்கொள்ளலாம் என்றும் அதற்காக எவ்வளவோ

காலமாக நூற்றுக்கணக்கான பெரிய ராஜாக்களாலும் தர்மிஷ்டர்களாலும் ஏற்படுத்தப்பட்ட தர்ம ஸ்தாபனங்களை அவர்கள் விரும்பியபடி நடத்துவதற்கு வேண்டிய வருமானத்திலிருந்து அந்த தர்ம ஸ்தாபனத்திற்கு ஊறு ஏற்படாதவகையில் விதிவிலக்கு அளித்திருப்பதை வரவேற்கிறேன். மேலும் கல்வி ஸ்தாபனங்களுக்கு என்று சற்றேறக்குறைய 9 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேலாக பூதானமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிலத்திற்கு எல்லாம் விதிவிலக்கு அளிக்கப்படும் என்று எதிர்ப்பார்க்கிறேன். அதே போன்று சூவேஜ் பார்ம் போன்றவை பல முனிசிபல் நகரங்களில் இருக்கின்றன. சாக்கடைத் தண்ணீரைக் கொண்டு வெறும் மேய்ச்சல் தரைக்காக உபயோகப்படுத்தப்பட்டு வருமானால் அதற்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் வேறு விவசாயம் செய்யப்படுமானால் வரி விதிக்கப்படும் என்று தெரிகிறது. இவ்விதம் முனிசிபல் ஸ்தாபனங்களிலிருந்து வரி வாங்கி பிறகு அவர்கள் பற்றுக் குறைக்கு மானியம் கொடுப்பதை விட சாக்கடை நீரை கொண்டு உபயோகப் படுத்தப்பட்டு வரும் நிலங்கள் முழுவதுக்கும் விதிவிலக்கு அளித்து அதிலிருந்து அவர்களுக்கு ஊதியம் முனிசிபாலிடிகளுக்கே கிடைக்கும்படி செய்தால் அது நியாயமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோன்று " அவென்யூஸ் ", சாலைகளின் ஓரங்களில் வைக்கப்பட்டிருக்கும் மரங்கள், ஜில்லா போர்டு இப்போது ஜில்லா கவுன்ஸிலாக வந்திருக்கிறது. ரஸ்தாக்களைப் போன்ற இடங்களிலெல்லாம், சாலை ஓரங்களில் நிழல் தருவதற்காக வேண்டி, பலன் தரக் கூடிய மரங்களாக இருந்தால், அவைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கு விதி விலக்கு அளிக்கப்படவேண்டியது நியாயம் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன். இதற்கு விதி விலக்களிக்காமல் இருப்பது, அவென்யூஸை விருத்தி செய்ய வேண்டுமென்று சொல்கிற அந்த இயக்கத்திற்கு உற்சாகம் அளிக்கும்படியாக இருக்காது. இந்த இயக்கத்தை ஊக்குவிக்க அதற்கும் விலக்கு அளிக்க முன் வரவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரியாக ஸ்தல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய இந்த விதமான வருமானத்திற்கும் விலக்கு கொடுக்க வேண்டியது நியாயம் என்று சொல்லிக்கொண்டு, காலம் அதிகமாகி விட்டதால் சபாநாயகர் மணி அடிப்பதற்கு முன்னால் உரையை முடித்துக் கொண்டு, நாளைக்குப் பேசுவதற்கு எனக்கு அனுமதி கொடுப்பார்கள் என்று எண்ணிக்கொண்டு. . . .

DEPUTY SPEAKER : உங்களுக்கு இன்னும் இரண்டு நிமிஷங்கள் இருக்கின்றன. நீங்கள் பேசலாம்.

SRI A. VEDARATHNAM : மற்ற விஷயங்களைப் பற்றி தொடர்ச்சியாக நாளை பேசுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு. .

DEPUTY SPEAKER : இன்னும் இரண்டு நிமிஷங்கள் இப்பொழுதே பேசிவிடுங்கள்.

SRI A. VEDARATHNAM : அரை குறையாக இப்போது பேசுவதைவிட நாளைய தினம் மற்ற விஷயங்களைப் பற்றி தொடர்ந்து பேசுகிறேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned.